பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 03 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் கல்வி முறையை உலக தரத்தில் கொண்டுவர பல்கலைக்கழகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

1. தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் புதிய ரயில் வழித்தடங்களுக்கு, ரயில்வே அனுமதி அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

2. பெட்ரோல், டீசல் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய பெட்ரோலிய அமைச்சகம் கூறியுள்ளது.

3. இந்தியாவுக்கு பெட்ரோலிய எரிவாயு ஏற்றிவந்த **Shivalik, Nanda Devi** ஆகிய இரண்டு கப்பல்களும் பாதுகாப்பாக **Hormuz** நீரிணையை கடந்துவிட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. கொல்கத்தா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரன் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>>

நாட்டில் கல்வி முறையை உலக தரத்தில் கொண்டுவர பல்கலைக்கழகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இமாச்சலப்பிரதேசத்தில் மத்திய பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் இளையோர்கள் மற்றும் மாணவர்களின் பங்கு இன்றியமையாதது என்றார்.

அனைத்து மாநிலங்களும் ஒருங்கிணைந்து வளர்ச்சியடைந்தால் மட்டுமே நாடு முன்னேற முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இமாச்சலப்பிரதேச மக்கள் அதிக அளவில் ராணுவத்தில் சேர்ந்து பணியாற்றுவது மகிழ்ச்சி அளிப்பதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் பிஜேபி ஆட்சி அமைத்தால் இரண்டு ஆண்டுகளில் போதைப்பொருள் புழக்கம் இல்லாத மாநிலமாக மாற்றப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம் **Moga** மாவட்டத்தில் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மாநில சட்டப்பேரவையில் மத மாற்றத்தை தடை செய்வதற்கான மசோதா கொண்டுவரப்படும் என்றும் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்றுவரும் ஆம் ஆத்மி ஆட்சியில், மாநிலத்தில் குற்றங்கள், ஊழல் மற்றும் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

மத மாற்றமும் அதிக அளவில் நடைபெறுவதாக கூறிய அவர், விவசாயிகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

மத்தியிலும் — மாநிலத்திலும் பிஜேபி அரசு அமைவதற்கு மக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்ட அவர், பிரச்சினைகளிலிருந்து விடுபட பிஜேபி அரசு அமைவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

பஞ்சாப் மாநிலம் மீண்டும் மறுமலர்ச்சி பெறும் வகையில், பிஜேபி ஆட்சி மலரும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் சிறப்பானத் திட்டங்கள் கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார்.

சீக்கிய மதத்திற்கு உரிய அங்கீகாரம் அளித்து, மதக்குருக்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்படும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி மற்றும் அதிகரித்துவரும் ரயில் போக்குவரத்து தேவையை கருத்தில்கொண்டு, புதிய ரயில் வழித்தடங்கள் அமைப்பது குறித்து தாம் வலியுறுத்தியதையடுத்து ரயில்வே அமைச்சர் அதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், தமக்கு எழுதிய கடிதத்தில், பல்வேறு ரயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான சர்வே நடத்த அனுமதி அளித்துள்ளதாக கூறியுள்ளார்.

சென்னை — அரக்கோணம், அரக்கோணம் — ரேணிகுண்டா, சென்னை — கூடூர் இடையே ஐந்தாவது மற்றும் ஆறாவது ரயில் தடங்கள் அமைப்பதற்கான சர்வேக்கு அனுமதி அளித்துள்ளதாக கூறியுள்ளார்.

மேலும், விழுப்புரம் — திருச்சி — நாகர்கோவில் இடையே மூன்றாவது மற்றும் நான்காவது ரயில்வே வழித்தடம், பாலக்காடு — பொள்ளாச்சி — போத்தனூர் இரட்டை ரயில் பாதை, திருச்சி — காரைக்குடி — மானாமதுரை — மதுரை இரட்டை ரயில்பாதை பணிகளுக்கான சர்வேக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி மேலும் பல நலத்திட்டங்களை அண்மையில் அறிவித்துள்ளதாகவும் கூறினார்.

***(Sound Byte — எல். முருகன் - 47 Sec. )***

<<<<<>>>>>>

பெட்ரோல், டீசல் போதிய அளவில் கையிருப்பில் இருப்பதாக மத்திய பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சமூக வலைதளத்தில் அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், தமிழகத்தில் பெட்ரோல் பங்குகளிலிருந்து பெட்ரோலை பிளாஸ்டிக் கண்டெய்னரில் வாங்கி சென்றது தெரியவந்துள்ளதாக கூறியுள்ளது.

இந்த பெட்ரோல் பங்கை மூட உத்தரவிட்டுள்ளதோடு, போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

நுகர்வோர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு, பெட்ரோல், டீசல் தனி கண்டெய்னர்களில் வாங்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது

பெட்ரோல் விற்கும்போது பாதுகாப்பு நெறிமுறைகளுக்கு ஏற்ப விநியோகம் செய்ய வேண்டும் என்று பெட்ரோல் சில்லரை விற்பனையாளர்களுக்கு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

<<<<<>>>>>>

நாட்டில் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் செய்ய உறுதிபூண்டிருப்பதாக பாரத் பெட்ரோலியம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நுகர்வோர்களுக்கு தொடர்ந்து சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் செய்து வருவதாக கூறியுள்ளது.

இந்துஸ்தான் பெட்ரோலியம் நேற்று நாடு முழுவதும் 15 லட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்ததாக கூறியுள்ளது.

மக்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் உடனடியாக கிடைப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருவதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவை இணையதளம் மூலம் மேற்கொள்ளலாம் என்றும் கூறியுள்ளது.

<<<<<>>>>>>

இந்தியாவுக்கு பெட்ரோலிய எரிவாயு ஏற்றிவந்த **Shivalik, Nanda Devi** ஆகிய இரண்டு கப்பல்களும் இன்று காலை பாதுகாப்பாக **Hormuz** நீரிணையை கடந்துவிட்டதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கப்பல் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சக சிறப்பு செயலர் திரு ராஜேஷ்குமார் சின்ஹா, இந்த கப்பல்கள் மூலம், **92** ஆயிரத்து **700** மெட்ரிக் டன் சமையல் எரிவாயு கொண்டுவரப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த கப்பல்கள் வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் **Mundra, Kandla** துறைமுகங்கள் வந்துசேரும் என்றும் திரு ராஜேஷ்குமார் சின்ஹா கூறினார்.

<<<<<>>>>>>

பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ், 22-வது தவணைத் தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று விடுவித்தார்.

இத்திட்டம் தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

*(Sound Byte — விவசாயிகள் - 54 Sec.)*

<<<<<>>>>>>

இந்திய கடற்படையின் **I N S Trikand** போர் கப்பல் மொரிஷியஸ் நாட்டின் தேசிய தின அணிவகுப்பில் பங்கேற்றதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மொரிஷியஸ்ஸின் **Port Louis** துறைமுகத்துக்கு சென்ற இந்த போர் கப்பல், அந்நாட்டு தேசிய தின கொண்டாட்டங்களில் பங்கேற்றதாக தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படை வீரர்களும் இந்த அணிவகுப்பில் பங்கேற்றனர்.

இந்தியா — மொரிஷியஸ் இடையேயான உறவுகளை மேம்படுத்தும் வகையில், மகா சாகர் திட்டத்தின்கீழ், இந்திய கடற்படை போர் கப்பல் அந்நாட்டு தேசிய தின விழாவில் பங்கேற்றதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

ஜார்கண்ட் மாநிலம் லாத்தேஹர் மாவட்டத்தில் தீவிரமாக தேடப்பட்டு வந்த இரண்டு நக்சலைட்டுகளை காவல்துறையினர் இன்று கைது செய்தனர்.

தீவிரவாத தாக்குதல்களை முன்னின்று நடத்தி வந்த இந்த நக்சலைட்டுகளிடம் இருந்து ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள், குண்டுகள், மற்றும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் ரொக்கம்

கைப்பற்றப்பட்டதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. குமார் கவுரவ் தெரிவித்தார்.

லாத்தேஹர் மாவட்ட வனப்பகுதிகளில் நக்சலைட்டுகளை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

<<<<<>>>>>>

கொல்கத்தாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரன் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-2, 4-6, 5-7 என்ற செட் கணக்கில் இந்தியாவின் சித்தார்த் ராவத்தை வென்றார்.

<<<<<END>>>>>>